மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.213/20</u>21

2025ம் ஆண்டு அக்டோபர் 28ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஈஸ்வரமூர்த்தி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>28.10.2025 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு</u>

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனது பூமியும், பிரதிவாதி நடராஜ் என்பவரின் பூமியும் அருகருகே இருக்கக்கூடிய பூமிகள் என்றால் சரிதான் இந்த வழக்கில் நான் சொல்லி உள்ள பொது கிணறு நடராஜ் என்பவரது பூமிக்குள் தான் அமைந்துள்ளது என்றால் சரிதான். ஆனால் அது தனியாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது அந்த கிணற்றில் எனக்கு எவ்வளவு பங்கு உள்ளது என்றால் சரி பாதி பங்கு உள்ளது. மீதி சரி பாதி பங்கு நடராஜன் வகையறாவுக்கு பாத்தியப்பட்டது ரீ.ச.எண்.181/4 பூமியானது நடராஜனுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

2. எனது பூமி ரீ.ச.எண்.181/5 மற்றும் ரீ.ச.எண்.181/1 என்றால் சரிதான் தாவா பொது கிணறு வெட்டப்பட்டுஎவ்வளவு காலம் இருக்கும் என்றால் என் தாத்தா காலத்தில் இருந்து தாவா பொதுக்கிணறு நிலையில் உள்ளது அந்த காலத்தில் ஏற்றம் வைத்து கவலைகள்

மூலமாக தண்ணீர் இறைத்தார்கள் என்றால் சரிதான். அதற்கான அமைப்புகள் தாவா பொதுக்கு கிணற்றில் உள்ளதா என்றால் ஏத்தம் மட்டும் உள்ளது வாரி இல்லை அது பயன்படும் இல்லாததால் அழிந்துவிட்டது. அந்த காலத்தில் இருந்தே கிணற்றிலிருந்து தண்ணீர் பாசன பூமிகளுக்கு செல்வதற்கு வாய்க்கால் அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு அதன் மூலமாக நீர்ப்பாசனம் செய்யப்பட்டது என்றால் சரிதான் அந்த வாய்க்கால்கள் தற்போது நிலையில் இல்லை என்றும் அழிந்துவிட்டது என்றால் சரிதான்.

3. பைப்லைன் போடப்பட்டதால் வாய்க்கால் பயன்படுத்தாமல் அழிந்துவிட்டது. அந்த காலத்தில் வாய்க்கால் எத்தனை அடி அகலத்தில் இருந்தது என்றால் 3 முதல் 4 அடி அகலத்தில் இருந்தது. அந்த வாய்க்கால்கள் தாவா 10 அடி அகல தடத்தின் கிழபுறத்தில் இருந்தது என்றால் இல்லை தடத்தில் தான் இருந்தது. அப்போது தடம் 7 அடி அகலத்திலும், வாய்க்கால் 3 அடி அகலத்திலும் இருந்தது என்று சொன்னால் சரிதான்.

4. வண்டிகள் செல்லும்போது தடத்திலும், வாய்க்காலிலும் சேர்த்து செல்லும். தடமும், வாய்க்காலும் சேர்ந்து உள்ளது என்பதை பொருத்தும் தடத்தையும், வாய்க்காலையும் பாதையாக பயன்படுத்துவதை பொருத்தும் எங்களது முந்தைய உரிமை ஆவணங்களில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் மாமூல் தடம், மாமூல் வாய்க்கால் என்று மட்டும் சொல்லப்பட்டுள்ளது. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்துக்களை பார்வையிட்ட சமயத்தில் தடத்தை பொறுத்து புகைப்படம் எதுவும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தனது வரைபடத்திலும்,

அறிக்கையிலும் யார் யார் பூமிகள் எங்கு எங்கு அமைந்துள்ளது என்பதை பொறுத்து குறிப்பிட்ட எதுவும் சொல்லவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

ஆவணங்கள் பார்வையிட வேண்டுமென்ற பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.10.28 18:51:46 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்